FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348094

1. District : மாவட்டம் செங்கல்பட்டு PS: காவல்நிலையம் செ.ந.க பிரிவு Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 03 Date: நாள் 05.06.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: Sec - 7 மற்றும் 7A
(ii) Act சட்டம்: In 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04.06.2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 Time to : நேரம் வரை 22.00
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.06.2026 Time : நேரம் 15.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - 1 Time : நேரம் 15.00

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுந்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 km வடகிழக்கில்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி நீருவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் நீரு.C.ராமமூர்த்தி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் நிலவரி வட்டாட்சியர் (ஓய்வு பெற்றவர்)
(g) Address : முகவரி பிளாக் - 1, செங்கல்பட்டு, பொழிப்பு நகர் நிலம்புக்குடி அருவலர், செங்கல்பட்டு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. நீரு. மதனகுமார், 2 வது எதிரி, சார்பதிவாளர் (பொறுப்பு) நீருவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம்
2. நீரு. மைதிலன் த/பெ மாதவன் சாமி, 125, கண்ணிகாபுரம் 1 வது தெரு, இ.கே.நகர், பிள்ளை
3. நீருமதி. 2 வது எதிரியின் மனைவி, வண்டி - 2, திருப்பதிகளர் தெரு, அனுமந்தம் பெட்டை, செங்கை - 91
4. நீரு. சிவபாலன்ராஜ் த/பெ அய்யாசாமி, பிளாட் எண் - 155, பாலாஜி நகர் மற்றும், மேம்பாடு, செங்கை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- ரூ - 1, 55, 100 /-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு - ரூ. 1, 55, 100 /-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

ஐயா, புனிதானில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

05.06.2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.06.2026 / 16.30

Name: பெயர் ...01.சக்காபாணி...
Rank: நிலை .....No. எண் .....
காவல் பொம்மனன்,
2nd நிலை பொறுப்பு பொறுப்பு அலுவலர்.

FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி

இன்று 05.06.2026 15.00 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் A.சக்கரபாணி ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.C.ராமமூர்த்தி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-1, செங்கல்பட்டு பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர் என்பவர் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

அனுப்புநர், திரு.C.ராமமூர்த்தி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-1, செங்கல்பட்டு பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, செங்கல்பட்டு. ந.க.எண்.1136-2024-அ1, நாள்:- 05.06.2026. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), செங்கல்பட்டு மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு - கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் - 04.06.2026-ம் தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல்நடவடிக்கை மேற்கொள்ள புகார் அளிப்பது - தொடர்பாக. பார்வை. செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.1136-2024-அ1 நாள் 04.06.2026. செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து, அதிகப்படியான பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு லஞ்சமாக பணம் பெறுவது தெரியவந்ததின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், 04.06.2026-ம் தேதி சுமார் 15.30 மணிக்கு ஆரம்பித்து மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் பின்வருமாறு. இன்று 04.06.2026-ம் தேதி சுமார் 15.30 மணியளவில் இரு துறை கூட்டாய்வு செய்வதற்கு கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது, மேற்குறிப்பிட்ட அலுவலகமானது தாம்பரம் - செங்கற்பட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் கிழக்குபுறமாக செல்லும் நெல்லிக்குப்பம் சாலையில் தென் புறமாக செல்லும் டிபென்ஸ் காலனி சாலையின் கிழக்கில் மேற்கு பார்த்து அமைந்துள்ளது. அந்த அலுவலகத்திற்குள் பார்ட்டி சகிதம் மெயின் கேட்டினை கடந்து உள்ளே சென்றபோது, இரண்டு பக்கமும் நபர்கள் அமரும் சிமெண்டால் ஆன இருக்கைகள் அமைந்துள்ளது. முன்பகுதியில் வராண்டாவும் அதனை ஒட்டியவாறு தெற்கில் கழிப்பறையும் அமைந்துள்ளது. வரண்டாவின் முன் பகுதியில் பத்திர பதிவிற்கு வரும் நபர்கள் அமரும்வண்ணம் Stainless Steel-லால் ஆன இருக்கைகள் அமைந்துள்ளது. வரண்டாவை அடுத்து ஹாலை ஒட்டியவாறு வடக்கு திசையில் உள்ளே செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலை கடந்த பிறகு கிழக்கு பார்த்தவாறு சார் பதிவாளர் அமரும் நாற்காலி மேஜை மற்றும் கணினிகள் உள்ளது. மேற்படி இருக்கையில் உதவியாளர், திரு.A.மதன்குமார், சார்பதிவாளர் (பொறுப்பு) என்பவர் அமர்திருந்தார். அவருக்கு முன்பாக பத்திரப்பதிவிற்கு வந்தவர்கள் கூட்டமாக நின்றிருந்தார்கள். சார்பதிவாளர் இருக்கைக்கு முன் பக்கம் இடது புறம் தெற்கு பார்த்தவாறு Data Entry Operator திரு M.சரவணன், என்பவர் அமரும் இருக்கையும், அவருக்கு கிழக்கில் உதவியாளர் S.அபிராமி என்பவரது இருக்கையும். மேற்படி அறைகள் plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிரே Data Entry Operator திருமதி.V.பிரபாவதி என்பவரது இருக்கை அமைந்துள்ளது மேற்படி அறையும் plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. Data Entry Operator திருமதி.V.பிரபாவதிக்கு

கிழக்கில் அலுவலக உதவியாளர் இருக்கை மற்றும் மேஜை அமைந்துள்ளது. அந்த இருக்கையில் தனிநபரான பணி ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.வாசுதேவன் த/பெ முருகேசன், வெங்கடேஸ்வரா நகர், கீழ்படப்பை, காஞ்சிபுரம் மாவட்டம் என்பவர் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்தார். அதனை ஒட்டியவாறு தெற்கு நோக்கி செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலுக்கு ஒட்டியவாறு கிழக்கு பார்த்தவாறு ஒரு அறையும், அந்த அறைக்குள் கிழக்கு பார்த்தவாறு மற்றொரு அறையும் உள்ளது. இந்த அறைக்கு எதிரே பெண்கள் கழிப்பறை அதனை ஒட்டி ஆண்கள் கழிப்பறை மேற்கு பார்த்தவாறு உள்ளது.மேற்படி தெற்கு நுழைவு வாயிலுக்கு கிழக்கில் கண்ணாடி மற்றும் Plywood தடுப்பால் ஆன கணினி அறை அமைந்துள்ளது. கணினி அறையில் உதவியாளர் திரு.L.சங்கர் என்பவர் இருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு வடக்கே பதிவறை அமைந்துள்ளது. உதவியாளர் திரு.A.மதன்குமார், சார்பதிவாளர் (பொறுப்பு) என்பவரிடம் நான் என்னை அறிமுகம் செய்துக்கொண்டும் மேலும் என்னுடன் உதவிக்கு வந்த செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் ஆய்வாளர் திரு.A.சக்கரபாணி அவர்களையும் மற்ற காவல் ஆளினர்களான சார்பு ஆய்வாளர், செல்வி.S.வளர்மதி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.V.கதிர்வேல், பெண் தலைமை காவலர்-660 திருமதி.பரமேஸ்வரி மற்றும் காவர்-470 திரு.பிரசாந்த் ஆகியோர்களை அடையாள அட்டையை காண்பித்து, அறிமுகப்படுத்தி வைத்து, அனைவரையும் அவரவர்களை பொறுப்பு சார்பதிவாளர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் விவரம் மற்றும் கையிருப்பு பண பதிவேட்டின் விவரம் மற்றும் அவர்கள் வைத்திருந்த பணம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த பணம்	பணக் கையிருப்பு பதிவேட்டின் விவரம்	குறிப்புரை
1.	திரு.A.மதன் குமார் வ/33 த/பெ.ஆசைத்தம்பி உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.	-	ரூ.200/-	பணக் கையிருப்பு பதிவேட்டில் ரூ.200/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் கைவசம் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூ.200/-னை மதிய உணவிற்காக செலவு செய்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
2.	திருமதி.S.அபிராமி, வ/32 த/பெ.வினோத்குமார், உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.	ரூ.940/-	ரூ.940/-	கைவசம் வைக்கப்பட்டிருந்த தொகையும் பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையும் சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.S.சங்கர், வ/32 த/பெ. லோகநாதன் உதவியாளர் சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.	ரூ.2210/-	ரூ.2210/-	கைவசம் வைக்கப்பட்டிருந்த தொகையும் பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையும் சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

4.	திரு.M.சரவணன் வ/31 த/பெ. மேகநாதன், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.	-	-	பணம் ஏதும் வைத்திருக்கவில்லை
5.	திரு.S.பிரபாவதி வ/48 க/பெ. சிவகுமார், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.	-	-	பணம் ஏதும் வைத்திருக்கவில்லை
6.	திரு.வாசுதேவன் த/பெ முருகேசன், வெங்கடேஸ்வரா நகர், கீழ்படப்பை,காஞ்சிபுரம் மாவட்டம் (பணி ஓய்வு பெற்ற தனிநபர்)	-	-	பணம் ஏதும் வைத்திருக்கவில்லை

அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வின்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் அவர்கள் வைத்திருந்த பண விவரம் மற்றும் பணம் வைத்திருந்ததற்காக கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம்	வைத்திருந்த இருப்புத்தொகை	பணத்திற்கான விளக்கம்
1.	திரு.கௌதமன் வ/42 த/பெ மாதவன் சாமி நெ.125, கன்னிகாபுரம், 1வது தெரு, கே.கே.நகர், சென்னை.	ரூ.6,000/- (500x12=6000/-)	இவர் மண்ணிவாக்கம் பகுதியில் உள்ள ஒரு இடம் குறித்து விசாரிக்க வந்ததாக தெரிவித்தார் ஆனால் யாருடைய இடம் என்பது குறித்தோ மேற்படி இடத்தின் சர்வே எண் என்ன என்பது குறித்தோ எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. மேலும், இது தொடர்பாக அவருடைய கைபேசியை அவருடைய விருப்பத்துடன் ஆராய்ந்தபோது அவருடைய Mobile No 9940015466 ல் இருந்து 7200556687 என்ற எண்ணிற்கு Whats app call மூலம் அடிக்கடி பேசப்பட்டுள்ளது. 7200556687 என்ற எண்ணானது தற்போதைய பொறுப்பு சார்பதிவாளர் திரு.மதன்குமார் என்பவருடையதாகும் இது குறித்து பொறுப்பு சார்பதிவாளரை விசாரணை செய்தபோது இந்த நபர் சிறு சிறு வேலைகளை செய்வதற்கு நியமிக்கப்பட்டவர் என்பது தெரியவருகிறது. எனவே முன்னுக்கு பின் முரனாக கூறியதால் லஞ்சமாக பெற்ற பணமாக ரூ.6000/- இருக்கலாம் எனக்கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
2.	திருமதி.உஷா க/பெ சரவணன், எண்.2,சிதம்பரனார் தெரு, வானுவம்பேட்டை, சென்னை-91.	ரூ.1,30,000/- (500x260=1,30,000/-)	இவர் ஆவண எண்.5952/2026-ன்படி தனது வீட்டினை விற்பனை செய்ய வந்ததாகவும், மேற்படி வீட்டில் குத்தகைக்கு குடி இருந்தவருடன் ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஆவணத்தை பைசல் செய்வதற்காக ரூ.1,50,000/- எடுத்துவந்ததாக தெரிவித்தார். மேலும் யாருடன் எப்போது குத்தகை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது

			என்பது குறித்து ஏதும் தெரிவிக்காததாலும் மேலும் பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.1,30,000/- மட்டும் இருந்ததாலும் மேலும் விசாரித்தபோது காலம்-3ல் கண்ட நபரை பற்றி தெரியாது என்று சொன்னார் பின்னர் இவர்தான் மேற்படி பத்திரத்தை எழுதிய ஆவண எழுத்தர் என தெரிவித்தார். இவர் தெரிவித்த மேற்படி விளக்கம் முன்னுக்கு பின் முரனாக இருந்ததாலும் மேற்படி பணம் லஞ்சமாக கொடுக்க கொண்டு வரபட்டிருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
3.	திரு.சிவானந்தம், வ/43, த/பெ வையாபுரி, Plot No.155, ஸ்ரீபாலாஜி நகர் அஞ்சல், மேப்பூர், சென்னை-600123.	ரூ.19,100/- (500x13=,6500/- 200x53=10600/- 100x20=2000/-)	இவர் வழக்கறிஞர் மற்றும் ஆவண ஏழுத்தராக பணிபுரிவதாகவும் இன்று குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு முடித்து கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரப்பதிவிற்கு வந்ததாகவும் மேற்படி குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரப் பதிவிற்கான . Fees -ஆக ரூ.19,100/- பெற்ற பணத்தையே எடுத்து வந்ததாக தெரிவித்தார். ஆனால் மேற்படி குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரப் பதிவு ஆவண எண் மற்றும் ஆவணத்தின் வகை பற்றியும் மேற்படி தொகையை Fees -ஆக கொடுத்தவரின் விவரம் குறித்து தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை மேலும் இவர் அளிக்கும் விளக்கம் காலம் எண்.2-ல் கண்ட நபர் கூறியதற்கு முரன்பாடாக இருந்ததால் இப்பணம் மேற்படி காலம் எண்.2-ல் கண்ட நபர் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் என விசார்ணைக்காக கைப்பற்றப்பட்டது.
4.	திரு.S.முருகன். த/பெ சுடலைமுத்து, நந்திவரம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு.	-	இவரை தொடக்கத்தில் விசாரித்தபோது காலம் எண்.2-ல் கண்ட நபருடன் துணைக்கு வந்ததாகவும் காலம் எண்.2-ல் கண்ட நபர் ரு-1,50,000/- பணம் வைத்திருந்ததாகவும் அது அவரது வீட்டில் குத்தகைக்கு குடியிருந்தவருக்கு கொடுக்கவேண்டிய பணம் என்று தெரிவித்தார் மேலும் விசாரிக்கையில் காலம் எண்.2-ல் கண்ட நபருக்கு இவர் கடணாக ரூ.50,000/- கொடுத்ததாகவும் இவருக்கு சேரவேண்டிய புரோக்கம் கமிஷன் ரூ.80,000/- ஆக மொத்தம் ரூ.1,30,000/-காலம் எண்.2-ல் கண்ட நபர் காலம் எண்.4-ல் கண்ட இவருக்கு கொடுக்க வைத்திருந்ததாக முன்னுக்கு பின் முரனாக தெரிவித்ததால் மேற்படி பணம் லஞ்சமாக கொடுக்க கொண்டு வரபட்டிருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தொகை ரூ.1,55,100/- (ரூ.500X285=142500/-, 200x53=10600/- மற்றும் 100x20=2000/-) என மொத்தம் ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நூறு ரூபாய் பணத்திற்கு பொறுப்பு சார்பதிவாளரோ. அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களோ மற்றும் பணம் வைத்திருந்தவர்களோ அதற்கான சரியான முகாந்திரம் கூறாததால், அனைத்தும்

சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இன்று 04.06.2026-ந்தேதி காலையிலிருந்து 106 ஆவணங்கள் பதிவிற்காக Token முன்பதிவு செய்யப்பட்டு உதவியாளர் திரு.A.மதன்குமார், சார்பதிவாளர் (பொறுப்பு) அவர்களால் 79ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அலுவலகத்தில் இருந்து கீழே கண்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1) 2026-தொகுதி எண்.41, வருகைப்பதிவேடு, 01.01.2026 முதல் என்று Lable ஒட்டப்பட்ட கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள் 2) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் DEO & IPCO வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள் 3) 2026-தொகுதி எண்.15, தனி நபர் பண இருப்புப்பதிவேடு, 01.01.2026 முதல் என்று Lable ஒட்டப்பட்ட கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள் 4) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் DEO & IPCO தனி நபர் பண இருப்புப்பதிவேடு, 5) 2026-தொகுதி எண்.22, இயக்கப்பதிவேடு, (Movement Register) 01.01.2026 முதல் என்று Lable ஒட்டப்பட்ட கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள் 6) சார்பதிவாளரை கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்கணினியில் இருந்து Print outஎடுத்து ஆஜர்படுத்திய Year 2026 Month June Account "A" Guduvanchery Date from 04.06.2026 to 04.06.2026. Account ஐ பார்வையிட்டதில் இன்று பதிவிற்காக முன் பதிவு செய்யப்பட்ட Token களின் எண்ணிக்கை 106 அதில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 79 என தெரியவந்தது. மேலும், முத்தரை தாள் கட்டணமாக ரூ.75,45,766/- Non Judicial Stamp Fees முத்திரை தாளாக தாக்கள் செய்யப்பட்ட தொகை ரூ.6,37,202/- மற்றம் பதிவு கட்டணமாக வதூல் செய்யப்பட்ட தொகை ரூ.28,19,330/- இன்று இச்சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் கூறப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.20,63,79,391/- என தெரியவந்தது. மேற்படி இக்கூட்டாய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட நபர்களை விசாரித்தும், அலுவலக ஆஜரில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் அவரவர்களது விளக்கங்களை எழுத்து மூலமாக தனித்தனியாக எழுதி கொடுத்துள்ளார்கள். தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு 04.06.2026-ம் தேதி மாலை 15.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின்போது உதவியாளர் திரு.A.மதன்குமார், சார்பதிவாளர் (பொறுப்பு) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் என்பவரின் உத்தரவுப்படி இடைத்தரகராக செயல்பட்டு லஞ்சப் பணத்தை வதூல் செய்து வைத்திருந்த திரு.கௌதமன் வ/42 த/பெ மாதவன் சாமி, நெ.125, கன்னிகாபுரம், 1வது தெரு, கே.கே.நகர், சென்னை என்பவர் வைத்திருந்த பணம் ரூ.6,000/- மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக திருமதி.உஷா, க/பெ சரவணன், எண்.2,சிதம்பரனார் தெரு, வானுவம்பேட்டை, சென்னை-91 என்பவர் வைத்திருந்த ரூ.1,30,000/- மற்றும் திரு.சிவானந்தம், த/பெ வையாபுரி, பிளாட் எண்-155, ஸ்ரீபாலாஜி நகர் அஞ்சல், மேப்பூர், சென்னை என்பவர் வைத்திருந்த ரூ.19,100/- (500X285=142500/-, 200x53=10600/-, 100x20=2000/-) ஆக மொத்தம் ரூ.1,55,100/- ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நூறு ரூபாய் பணத்திற்கு பொறுப்பு சார்பதிவாளரோ, அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களோ மற்றும் பணம் வைத்திருந்தவர்களோ

அதற்கான சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,55,100/- (ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நூறு ரூபாய்) மற்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட இதர ஆவணங்களையும் பார்வையில் கண்ட செயல்முறை ஆணை ஆகியவற்றுடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்xxx) 5.6.26 திரு.C.ராமமூர்த்தி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-1, துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு) செங்கல்பட்டு மாவட்டம். இணைப்பு - 1) செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.1136-2024-அ1 நாள் 04.06.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ. ரூ.1,55,100/- 3) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் தனி அறிக்கை- 6 1) திரு.A.மதன் குமார், சார் பதிவாளர் (பொறுப்பு) 2) திருமதி.S.அபிராமி, உதவியாளர், 3) திரு.S.சங்கர், உதவியாளர், 4) திரு.M.சரவணன், (DEO), 5) திரு.S.பிரபாவதி (DEO), 6) திரு.வாசுதேவன் (பணி ஓய்வு பெற்ற தனிநபர்) 4) தனிநபர்களின் விளக்க கடிதம் - 4, 1) திரு.கௌதமன் 2) திருமதி.உஷா, 3) திரு.சிவானந்தம், 4) திரு.S.முருகன், 5) 2026-தொகுதி எண்.41, வருகைப்பதிவேடு, 01.01.2026 முதல் என்று Lable ஒட்டப்பட்ட கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள். 6) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் DEO & IPCO வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள். 7) 2026-தொகுதி எண்.15, தனி நபர் பண இருப்புப்பதிவேடு, 8) கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் DEO & IPCO தனி நபர் பண இருப்புப்பதிவேடு, 9) 2026-தொகுதி எண்.22, இயக்கப்பதிவேடு, (Movement Register) 10) Year 2026 Month June Account "A" Guduvanchery Date from 04.06.2026 to 04.06.2026.

ஐயா,

மேலே கண்ட புகாரினைப் பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/AC/2026/CP பிரிவு 7, 7A PC Amendment Act, 2018 ஆக இன்று 05.06.2026 15.00 மணிக்கு வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் Form-91 ஆகியவற்றை மாண்பமை செங்கல்பட்டு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை உரிய நடவடிக்கைக்காக உயரதிகாரிகளுக்கும் முறையே அனுப்பப்பட்டது.

05.06.2026

(அ.சக்கரபாணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,
செங்கல்பட்டு.